## சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை

**OS.NO.191/2013** **தேதி.**13.02.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 13.02.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.கணேஷ்ராவ் |
| த/பெ. | திரு.லஷ்மண்ராவ் |
| வயது | 56/2026 |

துவக்க நேரம் 3.55 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

1. என் தந்தை லஷ்மண்ராவ், தாவா சொத்து குறித்து உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த உயில் எந்த தேதி, ஆண்டில் எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும், 1993ம் ஆண்டு எழுதினார்கள். எந்த சொத்து குறித்து உயில் எழுதினார் என்றால், இராணிப்பேட்டை சொத்து குறித்து உயில் எழுதினார்.உயில் எழுதும்பொழுது என் தந்தை யாருடன் வசித்து வந்தார் என்றால் என்னுடன் வசித்து வந்தார்.

2. உயில் எழுதும்பொழுது எனது தந்தை உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்தாரா என்றால் அப்படியெல்லாம் இல்லை. உயில் எழுதும்பொழுது எனது அப்பா, நல்ல நடமாட்டத்துடன் என்னுடன்தான் வசித்துவந்தார் என்றால் ஆமாம். அவர் நல்ல மனநிலையில் உயில் எழுதவில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதும்பொழுது யார், யாரெல்லாம் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால்

தெரியும். எனது அப்பாவிற்கு சாட்சி கையெழுத்து போட்ட நபர்களை கொண்ட நண்பர்கள் யாரும் இல்லை என்றாலும், எனது அப்பா, நல்ல மனநிலையில் இந்த உயிலை எழுதவில்லை என்றாலும் நல்ல மனநிலையில் எழுதினார். தாவா சொத்து குறித்து எனது தந்தையார், வேறு ஏதேனும் ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தியுள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து குறித்து, எனது தகப்பனார் ஒரு ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தியுள்ளார் என்ற விவரத்தை தெரிந்துகொண்டே, அந்த ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அதுபோன்று எதுவும் இல்லை.

3. எனது தந்தையார், எந்தவொரு உயிலையும் எழுதவில்லை என்றாலும், நான் இந்த வழக்கிற்காக போலியாக தயார் செய்துள்ள ஆவணம் என்றாலும் அப்படியெல்லாம் இல்லை. தாவா சொத்து குறித்த மூலப்பத்திரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை, என்னிடமிருந்த அனைத்து ஆவணங்களையும் கொடுத்துவிட்டேன்.

4. பி.த.சா.ஆ–1ல் உள்ள சொத்து குறித்து, எனது தந்தையார் யாருடன் அடமானம் போட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உண்மையில் தாவா சொத்து குறித்த முழு விவரம் எனக்கு தெரிந்திருந்தால், நான் சொல்லியிருப்பேன் என்றாலும், விவரம் தெரியாததால் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை, தாவா சொத்து குறித்து உயில் எழுதிவைத்த விவரம் வாதி மற்றும் மற்ற வாரிசுதாரர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. வாரிசுதாரர்கள் என்றால் இந்த மூன்று பிரதிவாதிகளை தவிர்த்து மற்றவர்களும் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். நாங்கள், பாகப்பிரிவினை செய்துகொண்டதாக சொல்லும்நிலையில், பாகப்பிரிவினை செய்தவாறு தற்பொழுதும், அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அட்டவணையில் உள்ள சொத்துக்களை அனுபவித்து வருகிறோமா என்றால் ஆமாம்.

6. நான், பாகப்பிரிவினைப்படி சொத்துக்களை அனுபவித்து வருவதாக சொல்வதற்கு எந்தவித வரி ரசீது மற்றும் வேறு வருவாய் துறை ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் வரி செலுத்திவருகிறேன். இந்த சொத்து குறித்து, இராணிப்பேட்டை நகராட்சியில் சர்வே பில்டு செய்த பதிவேட்டில் மாற்றம் செய்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில், நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. தாவா சொத்தை இதுவரை பாகப்பிரிவினை செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பாகப்பிரிவினை செய்துகொண்டதாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில், கிருஷ்ணகிரியில் உள்ள வீட்டை எனது தகப்பனார் கிரையம் வாங்கவில்லை என்றாலும் எனது சகோதரர் குமார்தான் கிரையம் வாங்கினார் என்றாலும் சரியல்ல, எனது அப்பாதான் கிரையம் வாங்கினார். இந்த கிருஷ்ணகிரி சொத்தை எனது தந்தைதான் கிரையம் வாங்கினார் என்பதற்கு நான் எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது அப்பா ஆரணி சொத்தை விற்றுதான் கிருஷ்ணகிரி வீட்டை வாங்கினார், இந்த வாசகம் ஆரணி வீட்டை விற்ற கிரைய பத்திரத்தில் உள்ளது.

8. ஆரணி வீட்டை விற்றபிறகு, சுமார் எத்தனை ஆண்டுகள் கழித்து கிருஷ்ணகிரி வீட்டை வாங்கியதாக நான் சொல்கிறேன் என்றால் அப்பொதுதே வாங்கிவிட்டார். நான், சொல்வது தவறு என்றால் சரியல்ல. ஆரணி வீட்டை எனது தகப்பனார் வாங்கவில்லை என்றாலும் குமார்தான் கிரையம் பெற்றார் என்றாலும் சரியல்ல. எனது அப்பா கிரையம் வாங்கியிருந்தால் அவர் பெயரில்தான் வாங்கிருப்பார் என்றால் அண்ணன் பெயரில் வாங்கவேண்டும் என்பதற்காக வாங்கினார். வாதி இவ்வழக்கில் கோரிய பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், எனவே தாவா சொத்தில் வாதிக்கு பாகம்கோர முழு உரிமை உள்ளது என்றாலும், பாகம் பிரித்து கொடுக்க எனக்கு கடமை உள்ளது என்றாலும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

**OS.NO.191/2013**

முடிவு நேரம் 4.30 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.